வழக்குரைக் காதை

ம. முத்தரசி
மூன்றாம் ஆண்டு தமிழ்த்துறை
புனித ஜோசப் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
வெய்க்காலிப்பட்டி

மலர்: 12

சிறப்பிதழ்: 1

மாதம்: மார்ச்

வருடம்: 2025

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.5281/zenodo.14959540

முன்னுரை

வழக்கு என்பது ஏதேனும் ஒரு குற்றத்தை இரு தரப்பினரிடம் இருந்து சரியான ஆதாரங்களுடன் விசாரணை செய்து உரிய நீதியை வழக்கு மூலம் பெறுவதாகும். அவ்வாறாக சிலப்பதிகாரத்தில் வழக்குரை காதை என்னும் பகுதியில் கண்ணகி எவ்வாறு வழக்குரைத்தாள் என்பதை கட்டுரை விளக்குகின்றது.

சிலப்பதிகார நூல் அறிமுகம்

தமிழில் எழுதப்பட்ட ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று. சிலப்பதிகாரம் பாட்டிடையிட்ட தொடர்நிலை செய்யுள் எனவும் வழங்கப்படுகிறது. இயல், இசை, நாடகம் என்னும் மூன்றினையும் காணலாம். இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. இன்பியலும், துன்பியலும் கலந்து எழுதப்பட்ட இந்நூலை இயற்றியவர் இளங்கோவடிகள் ஆவர். இவர் புகழ்பெற்ற சேர மன்னன் செங்குட்டுவனுடைய தம்பி என கருதப்படுகிறது. சிலம்பு காரணமாக விளைந்த கதை ஆனதால் சிலப்பதிகாரம் ஆயிற்று. இது ஒரு சமண சமய காப்பியம். 3 காண்டங்களையும் 30 காதைகளையும் கொண்டது.

வழக்குரை காதை

சிலப்பதிகாரத்தில் இரண்டாம் காண்டமான மதுரை காண்டத்தில் பத்தாவது காதையாக வழக்குரைக்காதை இடம் பெற்றுள்ளது. ஆசிரியப்பாவினால் அமைந்த இக்காதையில் சில வெண்பாக்களும் இடம் பெற்று இருக்கின்றன. இந்தப் பகுதியில் காப்பியத் தலைவி கண்ணகி, தன் கணவன் கோவலன் கள்வன் அல்லன் என உணர்ச்சி பொங்க வழக்குரைத்து வெல்வதும், தோற்ற பாண்டிய மன்னன் உயிர் நீப்பதும் இக்காதையில் இடம்பெறும்.

கோப்பெருந்தேவியின் கனவு

அரண்மனையில் பாண்டிய அரசி கோப்பெருந்தேவி தான் கண்ட தீய கனவினால் உள்ளங் கலங்கி தன் தோழியிடம் கூறியது.

தோழி கேள்! நம் மன்னரது வெண்கொற்றக்குடை செங்கோலுடன் கீழே விழுந்தது. அரண்மனை வாயிலில் கட்டப்பட்ட ஆராய்ச்சி மணியின் ஓசை இடைவிடாது ஒலித்தது. எல்லா திசைகளும் அப்போது அதிர்ந்தன. அப்பொழுது சூரியனை இருள் சூழக் கண்டேன். பகல் பொழுதில் விண்மீன்கள் மிக்க ஒளியோடு புமியில் விழக் கண்டேன் இதெல்லாம் என்ன? அதனால் நமக்கு வரக்கூடிய துன்பம் ஒன்று உண்டு. அதனை நம் மன்னவர்க்கு சென்று கூறுவேன். இவ்வாறு கூறிய தேவி மன்னன் இருக்கும் அரசவை நோக்கிச் சென்றாள்.

"ஆங்கு
குடையோடு கோல் வீழ நின்று நடுங்கும்
....
.............................."

(சிலம்பு :பா-5)

இவ்வரியின் மூலம் அக்காலங்களில் கனவின் மீது நம்பிக்கை இருந்ததையும் அதனால் வரும் ஆபத்து குறித்து கொண்டதையும் அறிய முடிகிறது.

கண்ணகி வருகை

கண்ணகி அரண்மனைக்குள் வருகிறாள் வந்து வாயில் காவலன் முன் பேசுகிறாள். எல்லா! (வாயில் காவலனே) அரசன் தன் குடையும் கோலும் விழ அரண்மனை வாயில் மணி ஒலிப்பதை நான் காண போகிறேன். எட்டு திசையும் அதிரவும், சூரியனைப் பட்டப் பகலில் இருள் விழுங்கவும் நான் காண போகிறேன். வானவில் ஒடிந்து விழவும், பட்டப் பகலில் விண்மீன்கள் உதிரவும் நான் காண போகிறேன்.

"செங்கோலும், வெண்குடையும்
செறி நிலத்து மறித்து வீழ்தரும்"

(சிலம்பு :பா-10)

வாயில் காவலன் கண்ணகி சொன்ன சொற்கள் நிகழ்வதாக எண்ணி பார்க்கிறான். செங்கோலும், குடையும், நிலத்தில் விழுகின்றன. வாயில் மணி நடுங்கி ஒலிக்கிறது. இரவில் வானவில் தோன்றுகிறது. பகலில் விண்மீன்கள் உதிர்கின்றன. எட்டு திசையும் அதிர்கிறது அரசனுக்கு துன்பம் வரப்போகிறது என மதுரை மாநகர மக்கள் வருந்தினர்.

கோப்பெருந்தேவியின் வருகை

கோப்பெருந்தேவி தான் கண்ட தீயக் கனவினை சொல்ல அரியணையில் இருக்கும் மன்னனிடம் செல்கிறாள். அவளுடன் மங்கலப் பொருட்கள் பலவற்றை எடுத்துக்கொண்டு அணிகலன் புண்ட அவளது தோழிகள் செல்கின்றனர்.

முகம் பார்க்கும் கண்ணாடி, அணிகலன்கள், வெற்றிலைப் பாக்கு பெட்டி, வண்ணப்பொடிகள், சுண்ணப் பொடிகள், மன்மதச் சாந்து, கன்னியாகத் தொடுத்த பு, மாலையாகத் தொடுத்த பு, விசிறும் கவரி, நறுமணப் புகை போன்றவற்றை எடுத்துக் கொண்டு சென்றனர். அவர்கள் கூனர், குள்ளக் குறளர், ஊமையர், இளையர், நரை மயிர் கலந்த கூந்தலர், என்னும் நிலையினராகவும் இருந்தன. கோப்பெருந்தேவி வாழ்க என்று வாழ்த்தி கொண்டு சென்றனர்.

"ஆடி ஏந்தினர், கலன் ஏந்தினர்
அவிர்ந்து விளங்கும் அணி இழையினர்
....
................."

(சிலம்பு:பா-15)

இவ்வாறு பல பொருட்களை ஏந்திய தோழிகளுடன் கோப்பெருந்தேவி அரண்மனை நோக்கி வருகிறாள்.

கண்ணகி அரசனுக்கு அறிவிப்பது

கண்ணகி காவலனிடம் கூறுகிறாள் வாயில் காவலனே! ஆளும் முறைமையில் பிழை செய்தவன் வாயிலை காப்பவனே! இரண்டு சிலம்புகளில் ஒன்றைக் கையில் ஏந்தி கொண்டு கணவனை இழந்த ஒருத்தி உன்னைக் காண வாயிலில் காத்திருக்கிறாள் என்று அரசனுக்கு அறிவிப்பாயாக என்று கண்ணகி கூறுகிறாள்.

"இணை அரிச்சிலம்பு ஒன்று ஏந்திய கையள்
கணவனை இழந்தாள் கடை அகத்தாள் என
அறிவிப்பாயே அறிவிப்பாயே என"

(சிலம்பு :பா-25)

முறைமையில் பிழை செய்தவன் வாயிலை காப்பவன் என்று கூறுவதனால் கண்ணகியின் சொல்லாட்சித் திறனை அறியலாம்.

கண்ணகி தோற்றத்தை பற்றி வாயிலோன் மன்னனிடம் கூறியது

வாயிலோன் வேந்தனுக்குத் தெரிவிக்கிறான். வாழி கொற்கை வேந்தே பொதியமலைத் தலைவனே செழிய தென்னவ பழிப்பக்கம் செல்லாத பஞ்சவ வாழி ஒருத்தி வேந்தனைக் காண அரண்மனை வாயிலில் நிற்கிறாள். அவள் காளி போல் காணப்படுகிறாள். ஆனால் காளி அல்லள், வெட்டிய தலையைக் குருதி ஒழுகக் கையில் பிடித்துக் கொண்டு வெற்றி வேலுடன் மேடையில் நிற்கும் கொற்றவை அல்லள். ஏழு பெண்களில் இளையவராகிய சாமுண்டியும் அல்லள். இறைவன் சிவபெருமானின் ஆட்டத்தைக் கண்டு அருளிய அணங்கு அல்லள். அச்சம் தரும் காட்டில் வாழ விரும்பும் காளி அல்லள். நெஞ்சில் கறுவு கொண்டவள் போலவும், பெருஞ்சினம் கொண்டவள் போலவும் காணப்படுகிறாள். பொன்னால் செய்யப்பட்ட சிலம்பு ஒன்றைக் கையில் ஏந்தி கொண்டிருக்கிறாள். கணவனை இழந்தவள் அரண்மனை வாயிலில் வேந்தனைக் காணக் காத்துக் கொண்டிருக்கிறாள்.

"வாழி!எம் கொற்கை வேந்தே வாழி!
தென்னம் பொருப்பின் தலைவ வாழி!
....
...................." ***(சிலம்பு:ப-:30)***

இப்பாடல் வழி வாயிலோன் மன்னனிடம் கண்ணகியின் தோற்றத்தை வியந்து கூறிய திறத்தை அறியலாம்.

பாண்டிய மன்னன் கண்ணகியிடம் வினாவுதல்

அவள் வரட்டும் என்று பாண்டியன் ஒப்புதல் அளித்தான். வாயில் காப்பவன் திரும்பி வந்து உள்ளே செல்லுமாறு கூறினான். கண்ணகி வேந்தனை அணுகினாள். கண்ணீரை வடித்துக் கொண்டு என் முன் வந்து நிற்கிறாய். பெண்ணே! நீ யார்? என வேந்தன்வினவினான்.

பாண்டிய மன்னனிடம் கண்ணகி வழக்குரைத்தல்

ஆராய்ந்து பார்க்காத மன்னா! நான் சொல்வதைக் கேள். என் நாட்டு வேந்தன் பறவைக்கே துன்பம் தீர்த்தவன். என் நாட்டு வேந்தன் பசுவின் துன்பத்தை போக்கத் தன் மகனையே தேர் ஏற்றிக் கொன்றவன். அப்படிப்பட்ட சிறப்பினை உடைய ஊரில் வணிகம் செய்து வாழ்பவன் மாசாத்துவான். அவன் பிறர் பழிக்காத சிறப்பினை உடையவன். புகழ்பெற்ற அவனுக்கு மகனாகப் பிறந்தவன் என் கணவன் வாழ்வதற்காக உன் ஊருக்கு வந்தோம். ஊழ்வினை துரத்திக் கொண்டு வர வந்தோம். என் கால் சிலம்பினை விற்பதற்காக அவர் வந்தார். உன்னால் கொலைக்களத்தில் மாண்டு போனார். அவர் பெயர் கோவலன். அவர் மனைவி நான் என் பெயர் கண்ணகி என்று கூறினாள்.

"சூழ் கழல் மன்னா! நின் நகர்ப் புகுந்து இங்கு
என் கால் சிலம்பு பகர்தல் வேண்டி நின்பால்
....
..............." ***(சிலம்பு:பா-60)***

இவ்வாறாக கண்ணகி தன் குலப்பெருமையை கூறி வழக்குரைக்கிறாள்.

கண்ணகியின் வழக்கும், வெற்றியும்

பெண் அணங்கே கள்வனைக் கொல்வது கடுங்கோல் அன்று. தூய வேல் செய்ய வேண்டிய ஆட்சி என்று பாண்டியன் கண்ணகிக்கு விளக்கம் தந்தான். பின் கண்ணகி சொல்கிறாள்.

"நல் திறம் படராக் கொற்கை வேந்தே
என் கால் பொன் சிலம்பு மணி உடை அரியே"

நன்கு திறம்பட எண்ணிப் பார்க்காத கொற்கை வேந்தே! என் கால் சிலம்பின் உள்ளே இருப்பவை மணி கற்கள் என்று கண்ணகி தெரிவித்தாள். யாம் வைத்திருக்கும் சிலம்பின் உள்ளே இருக்கும் பரல் முத்து. எம் சிலம்பையும் அவன் கையில் இருந்த சிலம்பையும் இங்கே கொண்டு வருக என்றான். சிலம்பினை வேந்தன் தன் முன் வைத்தனர்.

கண்ணகி தன் கையில் இருந்த காற் சிலம்பையும், தன் கணவனிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாக

அரசன் முன்வைத்த சிலம்பையும் அவையில் உடைத்தாள். அதன் உள்ளே இருந்த மணிக்கற்களில் ஒன்று அரசன் வாயில் தெறித்தது. அவன் வெண்கொச்சக் குடை சாய்ந்தது. அவன் கையில் இருந்த செங்கோல் விழுந்தது. "பொன் செய்யும் கொல்லன் சொல்லைக் கேட்டுத் தீர்ப்பு வழங்கிய யானோ அரசன்? யானே திருடன். மக்களைக் காக்கும் தென்புலப் பாண்டியர் ஆட்சி என்னை முதலாக்கிக் கொண்டு பிழை செய்து விட்டது. என் ஆயுள் கெட்டொழியட்டும் என்று சொல்லிக்கொண்டு மயங்கி விழுந்து உயிர்துறந்தான். கோப்பெருந்தேவியும் நிலைகுலைந்தாள் நடுங்கினாள். கணவனை இழந்தவருக்குக் காட்டுவது வேறொன்றும் இல்லை என்று சொல்லிக்கொண்டே கணவன் அடிகளைத் தொழுத வண்ணம் விழுந்து உயிர் துறந்தாள்.

முடிவுரை

கணவனை இழந்த கண்ணகி தான் ஒருத்தியாக நின்று தன் கணவன் மீது குற்றம் இல்லை என்பதை பாண்டிய மன்னனிடம் வழக்குரைத்து நீருபித்தாள் என்பதன் மூலம் கண்ணகியின் தனித்திறமையை அறிய முடிந்தது.

மேற்பார்வை நூல்கள்

1. உரையாசிரியர், ஞா. மாணிக்கவாசகன்.